# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்

(சுருக்கம்)

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் – படிகள் – வீட்டு வாடகைப்படி – திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம், கலசப்பாக்கம் ஊராட்சி மற்றும் வந்தவாசி கோட்டத்திலுள்ள வாரிய அலுவலகங்களில் புணியாற்றும் பணியாளர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப்படி தரம் 2–ஆக உயர்த்தி வழங்க –ஆணை வெளியிடப்படுகிறது.

---

(செயலகக் கிளை)

(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண்.107, நாள்: 03.06.2026.

வைகாசி – 20–ம் நாள்,
பராபவ வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2057.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.305, நிதி (படிகள்) துறை, நாள் 13.10.2017.
2. (நிலை) முழு வாரியம்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.9 நாள் 02.03.2018.
3. (நிலை) முழு வாரியம்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.10, நாள் 02.03.2018.
4. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் ஆணை எண்.3, நாள் 07.03.2019.
5. வட்டார வளர்ச்சி அலுவலர்/கலசப்பாக்கம் (வ.ஊ) கலசப்பாக்கம் கடித எண்.ந.க.வஅ1/1219/2022, நாள் 30.09.2022.
6. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வந்தவாசி, கடித எண். ந.க.அ/3/110/2023, நாள் 20.01.2023.

செயல்முறைகள்:

பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையில் 7–வது ஊதியக் குழு பரிந்துரையின்படி அரசு பணியாளர்களுக்கு 01.102017 முதல் வீட்டு வாடகைப்படி, மற்றும் அனைத்து படிகளும் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணைகளில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 01.10.2017 முதல் நகரஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி மற்றும் அனைத்துப் படிகளும் அரசு ஆணையைப் பின்பற்றி உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை 4–ல் திருவண்ணாமலை மாவட்டம், நகராட்சி எல்லையிலிருந்து 8 கி.மீ. தூரத்திற்குள் உள்ள கிராமங்கள்/ஊராட்சி மன்றங்கள்/ பேரூராட்சிகளில் பணியாற்றும் அரசு அலுவலர்களுக்கு 7–வது ஊதிய குழுவின் பரிந்துரையின் பேரில் வீட்டு வாடகைப்படி தரம்–3 லிருந்து தரம் 2–ற்கு உயர்த்தலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் ஆணையினை பின்பற்றி மேற்பார்வை பொறியாளர்/ திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள கலசபாக்கம் ஊராட்சி மற்றும் வந்தவாசி ஊராட்சிக்குட்பட்ட வாரிய அலுவலகங்களில் பணிபுரியும் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி தரம் 3–லிருந்து தரம் 2–க்கு உயர்த்தி வழங்கிட கோரிக்கை வைக்கப்பட்டது.

..2

5. இக்கோரிக்கையை கவனமாகப் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணையினை அடிப்படையாகக் கொண்டு மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அரசிதழில் ஆணை எண்.3, நாள் 07.03.2019ன்படி திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டத்தில் கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 3 வாரிய அலுவலகங்கள் மற்றும் வந்தவாசி கோட்டத்திற்கு உட்பட்ட 9 வாரிய அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் 142 வாரிய பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட வீட்டு வாடகைப்படியினை தரம் 2–ஆக உயர்த்தி, இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து வழங்கிட ஆணையிடப்படுகிறது.

ஜெ.ராதாகிருஷ்ணன்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

பெறுநர்
மேற்பார்வை பொறியாளர்,
திருவண்ணாமலை/மின்பகிர்மான வட்டம்,
அனைத்து தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்கள்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும்
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).

நகல் :–
தலைமை பொறியாளர்/திருவண்ணாமலை மண்டலம்,
செயலர்/தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்,
செயலாண்மை உதவியாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
செயலாக்க உதவியாளர்/இயக்குநர் பகிர்மானம்.
இருப்பு கோப்பு.

//உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

சார்பு செயலர்/ஊதிய மாற்றம்
மற்றும் விதிமுறைகள்